இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -01

# நேர்மை நெறி

ஜனவரி 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள் ஆர்வலர்
புன்கண்ணீ பூசல் தரும்

(NERMAI NERI)

Rs.10

# ஊழல் ஒழிந்தால் வாழ்க்கைத்தரம் உயரும்



## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY
ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை
பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.com
website:anticorruptionchennai.com

## தேர்தல் பத்திரத் திட்டம் (Election Bond Scheme),

வே. கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

மத்திய நிதி அமைச்சகம் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் தேதி தேர்தல் பத்திரம் 19ம் வகை (Phase) வெளியிடுவதாகவும் அவை ஜனவரி 1 முதல் 10ம் தேதி வரை வாங்கிக் கொள்ளலாம் என அறிவித்தது.

அரசியல் கட்சிகள் ரொக்க நன்கொடைகளை பெறுவதை தவிர்த்து வெளிப்படைத் தன்மையை கொண்டு வரும் நோக்கில் தேர்தல் பத்திரத் திட்டதை இந்திய அரசு ஜனவரி, 2018-இல் அறிமுகப்படுத்தியது. இந்திய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 29ஏ-இன் படி, பொதுமக்கள், பெரு நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்களிடமிருந்து தேர்தல் பத்திரத் திட்டத்தின் கீழ், இந்திய அரசியல் கட்சிகள் நன்கொடைகள் பெறலாம். இதற்கு வசதியாக, இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் தேர்தல் பத்திரங்களை வாங்கி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக வழங்கும் திட்டத்தை, இந்திய அரசு ஜனவரி, 2018-இல் நடைமுறைபடுத்தியது.

இத்திட்டத்தின் மூலம் அரசியல் கட்சிகள் ரொக்கமாக நன்கொடை பெறப்படும் ரொக்கப் பரிவர்த்தனைகள் தடைசெய்யப்படுகிறது. தேர்தல் பத்திரங்கள் பாரத ஸ்டேட் வங்கியின் தில்லி, கொல்கத்தா, மும்பை மற்றும் சென்னை கிளைகளில் மட்டும் விற்கப்படுகிறது. தேர்தல் பத்திரம் விற்பனை செய்த நாளிலிருந்து 15 நாட்களுக்கு மட்டுமே செல்லத் தக்கது. தகுதியான எந்த அரசியல் கட்சியும் நன்கொடையாகப் பெற்ற பத்திரத்தை வங்கியில் டெபாசிட் செய்தவுடன் அதே வங்கியில் அக்கட்சி வைத்திருக்கும் சேமிப்புக் கணக்கில் அதே நாளில் சேர்க்கப்பட்டுவிடும். கெடு தேதி முடிந்த பிறகு வங்கியில் பத்திரத்தை டெபாசிட் செய்து நிதியைப் பெற இயலாது.

"2019-20ஆம் ஆண்டில் பாஜக தனது ஒட்டுமொத்த வருமானமாக ரூ.3,623.28 கோடி பெற்றதாகத் தெரிவித்துள்ளது. ஆனால், அதில் 45.57 சதவீதம் அதாவது ரூ.1,651 கோடி மட்டுமே செலவிட்டதாகத் தெரிவித்துள்ளது. 2019-20ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியின் வருமானம் ரூ.682.21 கோடி எனத் தெரிவித்துள்ளது. ஆனால், ரூ.998.15 கோடி செலவிட்டதாகத் தெரிவித்துள்ளது. அதாவது வருமானத்தை விட 46 சதவீதம் கூடுதலாகச் செலவிட்டுள்ளது. தேர்தல் நிதிப் பத்திரங்களை விற்பனை செய்துவரும் எஸ்பிஐ வங்கி தகவல் அறியும் சட்டத்தின் மூலம் அளித்த பதிலில், "2019-20ஆம் ஆண்டில் தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலம் ரூ.3,429.56 கோடியை அரசியல் கட்சிகள் பெற்றுள்ளன. இதில் 87.29 சதவீதப் பணத்தை பாஜக, காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், என்சிபி ஆகிய 4 தேசியக் கட்சிகள் பெற்றுள்ளன" எனத் தெரிவித்துள்ளது.

இதில் 2018-19ஆம் ஆண்டில் பாஜகவின் வருமானம் ரூ.2,410 கோடியாக இருந்தது. இது 2019-20ஆம் ஆண்டில் 50.34 சதவீதம் அதிகரித்து அதாவது, ரூ.1,213.20 கோடி அதிகரித்து ரூ.3,623.28 கோடியாக அதிகரித்துள்ளது. தேசியக் கட்சிகள் பெரும்பாலும், தங்கள் வருமானத்தில் பெரும்பகுதியைத் தேர்தல் செலவுகளுக்கும், தேர்தல் பிரச்சாரத்துக்கும், பொதுச் செலவுக்கும் செலவிட்டுள்ளன.

நன்கொடையாளரின் அடையாளம் ரகசியமாக வைக்கப்பட்டிருப்பதால், அது கருப்புப் பண வரவை ஊக்குவிக்கும் என்பது இதை எதிர்ப்பவர்களின் வாதம். இந்த திட்டம் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் பணம் கொடுக்க உதவுவதற்காக உருவாக்கப்பட்டது தான்.

இதில் 20,000 ரூபாய்க்குக் குறைவாகப் பெறப்படுகிற நன்கொடைகளுக்கு எந்த விதமான கணக்கும் வைத்திருக்கத் தேவையில்லை. 20,000 ரூபாய்க்கு அதிகமாகப் பெறப்படுகிற நன்கொடை தொடர்பான தகவல்களைத் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்தக் குறைந்தபட்ச வரம்பை மத்திய அரசு கடந்த 2017-ம் ஆண்டு கொண்டு வந்த சட்டத்திருத்தத்தின் மூலம் 2,000 ரூபாய் எனக் குறைத்தது. அரசியல் கட்சிகள் ஒவ்வோர் ஆண்டும் வரவு, செலவுக் கணக்குகளைத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டும். அரசியல் கட்சிகள் மொத்தமாகப் பெற்றுள்ள நன்கொடை விவரங்கள் தேர்தல் ஆணையத்திடம் இருக்கும். இந்தக் குறைந்தபட்ச வரம்புக்குக் கீழ் பெறப்படுகிற நன்கொடைகளுக்கு எந்தவிதமான கணக்கும் வைத்திருக்கத் தேவையில்லை என்பதால் அரசியல் கட்சிகள் பெரும்பாலான நன்கொடை விகிதத்தை இந்தப் பிரிவின்கீழ் கணக்கு காட்டிவருகின்றன.

மத்திய அரசு கொண்டுவந்த நிதி மசோதா 2017-ன் மூலம் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், ரிசர்வ் வங்கிச் சட்டம், வருமான வரிச் சட்டம் மற்றும் நிறுவனங்களின் சட்டம் ஆகியவற்றில் பல்வேறு சட்டத்திருத்தங்களைக் கொண்டுவந்தது. இதில் முக்கியமானவை, ``20,000 ரூபாய் என்கிற குறைந்தபட்ச வரம்பை 2,000 ரூபாய் எனக் குறைத்தது, இந்தியர்களால் நடத்தப்படுகிற வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து அரசியல் கட்சிகள் நன்கொடைகள் பெறலாம். கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்களுடைய லாபத்திலிருந்து 7.5 சதவிகிதம் வரை தான் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க முடியும் என்கிற வரம்பைத் தளர்த்தியது" ஆகும்.

***தேர்தல் செலவின் உச்ச வரம்பு என்ன?***

ஒரு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர் அதிகபட்சமாக ரூ.28 லட்சம் (தற்போது ரூ 40 லட்சம்) வரை செலவு செய்யலாம். ஒரு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர் அதிகபட்சமாக ரூ.70 லட்சம் (தற்போது ரூ 95 லட்சம்) வரை செலவு செய்யலாம். இதற்கு அதிகமாகச் செலவு செய்தால் அந்த வேட்பாளரைத் தகுதி நீக்கம் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவை வெறும் வேட்பாளர்கள் செய்கிற செலவுக்கான உச்சவரம்பு, அரசியல் கட்சிகள் செய்கிற தேர்தல் செலவுகளுக்கு எந்தவிதமான உச்சவரம்பும் இல்லை. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் முறையே தேர்தல் முடிந்த 90 மற்றும் 30 நாட்களுக்குள் செலவுக் கணக்குகளை அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்நிலையில் கடந்த ஆண்டு தேர்தலில் அரசியல் கட்சிகள் செய்கிற செலவுகளுக்கு உச்சவரம்பு விதிக்க வேண்டும் எனத் தேர்தல் ஆணையம் முன்வைத்த பரிந்துரைக்குப் பல்வேறு அரசியல் கட்சிகளிடம் ஆதரவு இருந்தபோதும் ஆளும் பி.ஜே.பி. கட்சி இந்த முடிவைக் கடுமையாக எதிர்த்தது.

இந்த தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதங்கள் அவ்வப்போது எழுகிறபோதிலும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அதில் பெரிய அளவில் நாட்டம் இல்லை" என்கிறார் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி. காங்கிரஸ் கட்சி குறிப்பிட்டுள்ள தேசிய தேர்தல் நிதி தொடர்பாக 2004-ம் ஆண்டே தேர்தல் ஆணையம் மத்திய அரசுக்குப் பரிந்துரைத்திருந்தது. ஆனால் அதைப்பற்றி இதுநாள் வரையில் எந்தவொரு நடவடிக்கையும், விவாதமும் மேற்கொள்ளப்படவில்லை. அப்போது தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தவர் டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி. அவரிடம் பேசினோம். ``தேர்தல் சீர்திருத்தங்கள் அனைத்துமே நீதிமன்றத்தின் மூலமாகத்தான் வந்திருக்கின்றன. அரசியல் கட்சிகள் இணைந்து சில தவறான சீர்திருத்தங்களைக்

(அதாவது சீர்கேடுகள்) கொண்டு வந்துள்ளன. இந்தத் தேர்தல் நன்கொடைப் பத்திரம் என்பது மிகவும் தவறான ஒரு திட்டம், இது ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல. எந்த நிறுவனமும் கட்சிகளுக்கு நிதியளிக்கலாம். ஆனால் மக்களுக்கு, எந்தக் கட்சிகளுக்கு நிதியளிக்கிறார்கள் என்பது தெரிய வராது. தேர்தல் அரசியல் என்பது ஒரு பொது நடவடிக்கை, இதுவொன்றும் தனிப்பட்ட வணிகம் அல்ல. அரசியல் கட்சிகளுக்கு யார் நிதியளிக்கிறார்கள், அவர்கள் யாருக்காக வேலை செய்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும்.

தேசிய தேர்தல் அரசியல் நிதி என்பது பொதுமக்கள் மூலம் திரட்டப்படுவது. சில மேற்குலக நாடுகளில் அரசு நிதியின் மூலம் தேர்தல் செலவுகள் செய்யப்படுகின்றன. இந்தியாவில், அது சாத்தியமில்லை. அதனால்தான் சுயாதீனமான தேசிய தேர்தல் நிதி ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இது யார் சார்பும் இல்லாமல் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பில் இயங்க வேண்டும். நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் நேரடியாக அரசியல் கட்சிகளுக்கு நிதியளிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக இந்தப் பொது நிதியில் செலுத்தலாம். பின்னர், அதை அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுகளுக்காகப் பயன்படுத்தலாம். இது கட்சிகளின் முடிவுகள், செயல்பாடுகளில் கார்ப்பரேட் ஆதிக்கம் செலுத்துவதைக் குறைக்கும். 2,000 ரூபாய் என்கிற குறைந்தபட்ச வரம்புமே நீக்கப்பட வேண்டும். தேர்தல் அரசியலில் பயன்படுத்தப்படுகிற ஒவ்வொரு ரூபாயும் கணக்கு காட்டப்பட வேண்டும். இதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதை அனைத்து அரசியல் கட்சிகளையும் கூட்டி வழிமுறைகளை உருவாக்கலாம்" என்றார்.

இந்தத் திட்டத்தை விமர்சிப்பவர்கள், இந்திய ரிசர்வ் வங்கி, தேர்தல் ஆணையம், சட்ட அமைச்சகம் மற்றும் பல எம்.பி.க்களும் இதை எதிர்த்துப் பல முறை எச்சரிக்கை விடுத்துள்ளனர். நன்கொடையாளரின் அடையாளம் ரகசியமாக வைக்கப்பட்டிருப்பதால், அது கருப்புப் பண வரவை ஊக்குவிக்கும் என்பது இதை எதிர்ப்பவர்களின் வாதம் அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் பத்திரங்கள் மூலம் வழங்கப்படும் நன்கொடைகள் 'பணமோசடி'யின் ஒரு வடிவம் என்று கூட விமர்சகர்கள் கூறுவதும் சரியே!

. இந்தியாவின் முதல் பில்லியன் டாலர் கட்சியாக பாஜக உருவாகி வருவதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது ஏன் திடீர் என்று தேர்தல் நிதி பத்திரங்கள் சர்ச்சையாகிறது என்று கேட்கலாம். முதலில் லோக்சபா தேர்தலுக்கு மட்டுமே தேர்தல் நிதி பத்திரங்கள் வழங்கும் முறை இருந்தது. ஆனால் பிரதமர் மோடி, கர்நாடக தேர்தலுக்காகவும் இந்த முறையை கொண்டு வந்தார். இதற்காக அவர் ரிசர்வ் வங்கிக்கு அழுத்தம் கொடுத்தார் என்று செய்திகள் வெளியானது. நிறைய பணம் கர்நாடக தேர்தலில் இதன் மூலம் பாஜக அதிக பணம் பெற்று அதை செலவு செய்தது என்று புகார் வைக்கப்பட்டு இருக்கிறது.

ஆக, **இத்திட்டம் ஊழலையும் கருப்புப்பணத்தையும் வளர்க்கவே செய்யும். தவறான வழிகளில் பணம் திரட்டுவதே நமது அரசியல் கட்சிகளின் நோக்கம்.**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு **N** சுப்ரமணியன், தலைவர் **: 9444274352**

திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**

திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**

**Website : anticorruptionchennai.com**

# ஐந்தாண்டுகளில் இடிந்து விழக்கூடிய பல நூறு குடியிருப்புகள்!

***- சாவித்திரி கண்ணன்***

**(அறம் இணைய இதழ் December 29, 2021)**

திருவொற்றியூரில் 25 ஆண்டு கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது என்றால்..., தற்போது இரண்டரை ஆண்டுகளில் இடிந்து விழத் தயாராக இருக்கும் கே.பி.பார்க் உள்ளிட்ட பல நூறு குடியிருப்புகள் விவகாரத்தில் திமுக அரசு மௌனம் கடைபிடிப்பது ஏன்? கரப்ஷன் + கமிஷன் + கலெக்ஷன் = கழகங்கள்! எந்தக் கட்டிடமும் முறையாகக் கட்டப்பட்டால் குறைந்தபட்சம் 75 ஆண்டுகள் தொடங்கி 100 ஆண்டுகள் நிச்சயம் தாக்குப் பிடிக்கும். ஆனால், அரசு கட்டிக் கொடுக்கும் குடிசை மாற்றுவாரியக் குடியிருப்புகள் மட்டும் ஏன் 25 முதல் 30 ஆண்டுகளில் வாழத் தகுதியற்றுப் போகின்றன..?

சமீபத்தில் திருவெற்றியூரில் நொறுங்கி விழுந்த குடிசை மாற்று வாரிய கட்டிடம் 1993ல் கட்டத் தொடங்கி 96 ல் கட்டி முடிக்கப்பட்டது. அதாவது 25தே ஆண்டுகளில் அது வாழத் தகுதியற்றுப் போயுள்ளது என்றால், இவற்றை எந்த லட்சணத்தில் கட்டிக் கொடுத்துள்ளனர் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிய வருகிறது. இது தான் தமிழகம் முழுமையும் பெருமளவிலான குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் சந்திக்கும் சவாலாக உள்ளது. குடிசை மாற்று வாரியம் என்ற திட்டமே முதன்முதலாக கருணாநிதி ஆட்சியில் 1970ல் தான் உருவானது. அப்போது சென்னையில் மட்டுமே அவை அமல் படுத்தப்பட்டன. அந்த முதல் காலகட்டத்தில் கட்டப்பட்ட தண்டையார்பேட்டை வ.உ.சி நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் இப்போதும் கம்பீரமாகவே உள்ளன.

ஆனால், 1980, 1990, 2000, 2010 களில் கட்டப்பட்டவை தற்போது வாழத் தகுதியற்று போய்விட்டன! தமிழக அரசே சொல்லுகின்ற தகவல்கள்படி இந்த காலகட்டத்தில் கட்டப்பட்ட சுமார் 62 திட்டப் பணிகளில் உருவான 17,734 குடியிருப்புகள் தற்போது இடிக்க வேண்டிய நிலையில் உள்ளன. ஆக, இவற்றை இடித்துவிட்டு மாற்று வீடுகள் படிப்படியாக கட்டித் தரவுள்ளோம் என அரசு சொல்கிறது. இத்தனை பெரிய எண்ணிக்கையில் புதிய மாற்று வீடுகள் கட்டி அனைத்து பயனாளிகளுக்கும் கட்டி முடிக்க எப்படியும் ஐந்தாண்டுகள் ஆகலாம். அதே சமயம் அந்த ஐந்தாண்டு காலகட்டத்தில் மேலும் சில ஆயிரம் வீடுகள் இடிக்கவும், அதற்கு மாற்றாக கட்டப்படவுமான தேவைகள் உருவாக வாய்ப்பு உள்ளது. அதற்கும் நிதி ஒதுக்கி செய்வார்கள். பொதுப் பணம் தானே எப்படி விரையமானால் என்ன? நமக்குத் தொடர்ந்து திட்டங்கள் வேண்டும் ,கமிஷன்கள் வேண்டும் என அரசு இயந்திரம் செயல்பட போகிறதோ? என்னவோ?

இவ்வளவு குறுகிய காலகட்டத்தில் இந்த கட்டிடங்கள் வாழத் தகுதியற்றுப் போனதற்கு காரணமானவர்கள் கேள்விக்கு உட்படுத்தப்பட மாட்டார்களா? இவ்வளவு தரமற்றக் கட்டிடங்களை உருவாக்கியதற்கான உண்மைக் காரணங்கள் என்ன? அவர்களை தண்டிக்கத் தவறினால் இனி கட்டப்படும் கட்டிடங்கள் இதைவிட மோசமான தரத்தில் தான் அமையும்! அதற்கு சில உதாரணங்களாக புளியந்தோப்பு கே.பி.பார்க், தண்டையார்பேட்டை சேனியம்மன் பகுதி மற்றும் பெரம்பலூர் கவுல் பாளையம் பகுதி குடிசை மாற்று வாரியக் கட்டிடங்கள் கட்டப்பட்ட சில மாதங்களிலேயே சிதிலமடையத் தொடங்கியுள்ளதை சொல்லலாம்!

**பெரம்பலூர் கவுல்பாளையம்**

கே.பி.பார்க் விவகாரம் புதிய தலைமுறை தொலைகாட்சியினால் வெளிக்கொண்டு வரப்பட்டது. அப்போது இந்த தவறுக்கு காரணமானவர்கள் மீது ஐஐடி அறிக்கை வந்த பிறகு

கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம் என சட்டமன்றத்திலும், வெளியிலும் பலமுறை சொன்னார் அமைச்சர் த.மோ.அன்பரசன்.

கே.பி.பார்க் கட்டுமானத்தை ஆய்வு செய்த ஐஐடி குழு தன் அறிக்கையில், 'தரமற்ற வகையில் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதை கட்டிய பி.எஸ்.டி. கட்டுமான நிறுவனத்தை தடை பட்டியலில் சேர்க்க வேண்டும். அரசு ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு இனி ஒப்பந்தங்கள் வழங்கக் கூடாது' என தெரிவித்ததோடு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் இறுதி ஆய்வறிக்கையை ஐஐடி குழு தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், என்ன நடக்கிறது..? அந்த ஆய்வறிக்கையை பொதுவெளியில் வைக்காமல் கமுக்கமாக வைத்துக் கொண்டது தமிழக அரசு.





**புளியந்தோப்பு கே.பி.பார்க்**

இது தொடர்பாக அறப்போர் ஜெயராம் வெங்கடேசன்,தொடர்ந்து பேசி வருகிறார்! "இன்று வரை கே பி பார்க் கட்டுமானத்தில் ஊழல் செய்தவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. பி எஸ் டி நிறுவனம் மீது ஒரு வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை. லஞ்ச ஒழிப்புத்துறையிடம் CUBE நிறுவனத்தின் முழு ஆய்வு அறிக்கையுடன் புகார் அளித்துள்ளோம். 2007-ல் கே பி பார்க் கட்டுமானத்திற்கான டெண்டரில் ஒருவர் மட்டுமே பங்கெடுக்கும் வண்ணம் பி.எஸ்.டி நிறுவனத்திற்கு Single Bid Tender ஆக டெண்டர் வழங்கப்பட்டுள்ளது. 32,000 சதுர மீட்டருக்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. 89 கோடி 92 லட்சம் ரூபாய் A,B,C,D ஆகிய 4 ப்ளாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு சதுர அடிக்கு 800 ரூபாய் சந்தை மதிப்பை விட அதிகமாக பிஎஸ்டி நிறுவனத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் 27 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஐஐடி ஆய்வறிக்கை வந்த பிறகும் ஏன் இன்னும் FIR பதியப்படவில்லை ஏன்? கீழ்மட்ட அதிகாரிகள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது, அப்போது துணை முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் தொடங்கி அனைவர் மீதும் விசாரணை பாய வேண்டும். பி எஸ் டி நிறுவனம் மீது வழக்கு பதிவு செய்யாமல் இந்த விவகாரம் மூடி மறைக்கப்படுகிறது. அமைச்சர் தா மோ அன்பரசனுக்கும், பி எஸ் டி நிறுவனத்துக்கும் என்ன தொடர்பு என்பதை வெளிப்படையாக கேட்கிறோம். ஏன் வழக்கு பதியப்படாமல் உள்ளது? திமுக அரசு பி எஸ் டி நிறுவனத்தை காப்பாற்ற முயற்சிக்கிறது.," என பகிரங்கமாகவே குற்றம் சாட்டி வருகிறார்.

கே.பி.பார்க் விவகாரமாவது வெளியில் தெரிய வந்தது. ஆனால், அதன் பிறகு பல குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் சேதாரங்கள் தொடர்பாக செய்திகள் வெளியாகாமல் அரசு தரப்பில் அழுத்தம் தரப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

1979-ம் ஆண்டு தண்டையார் பேட்டை சேனியம்மன் கோயில் பகுதியில் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகள் சிதிலமடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 2018ஆம் ஆண்டு பழைய வீடுகளை இடித்துவிட்டு 44 கோடி ரூபாய் செலவில், 464 வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டன. கட்டி முடித்து ஓராண்டே ஆன நிலையில், வீடுகளின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டு, சிமெண்ட் கொட்டுவதாக குடியிருப்பு வாசிகள் வேதனையுடன் பல மனுக்கள் அனுப்பியும் முறையான நடவடிக்கை இல்லை.



பெரம்பலூர் கவுல்பாளையம் பகுதி குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு பகுதியில் ரூ 41 கோடி செலவில் 504 வீடுகள் சென்ற ஆட்சியில் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன. அவை ஒரு சில மாதங்களிலேயே உதிர்ந்து விழத் தொடங்கியுள்ளன. ஜெயலலிதா ஆட்சி காலத்தில் 2011 தொடங்கி 2016 வரை காலகட்டத்தில் ஐந்து ஆண்டுகளில் 59,023 அடுக்குமாடி குடியிருப்புகள், தனிநபர் வீடுகள் குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ளது. அதாவது தனியார் நிறுவனங்களின் மூலம்! இத்தனை குடியிருப்புகள் தொடர்ந்து கட்டப்பட்டு வரும் நிலையில் அரசே ஒரு கட்டுமான நிறுவனத்தை உருவாக்கலாமே! அரசே மணல் கொள்முதல் செய்தால் செலவு குறைவு.

மேலும், 3,024 அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் 7,513 தனி வீடுகள் என 10,537 வீடுகள் 2016 ஆம் ஆண்டு கட்டப்பட்டன. இதற்குப் பிறகு பன்னீர் செல்வம்,எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி காலத்தில் 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் இன்னும் ஒரு சில வருடங்களில் நிலைபெற முடியாமல் சரிந்துவிடக் கூடியவையே என அரசு வட்டார நண்பர்கள் தெரிவித்தனர். இந்த குற்றங்களை மூடி மறைக்கும் திமுக அரசு, கே.பி.பார்க் கட்டிடங்கள் இன்னும் ஒரு சில வருடங்களில் சரிந்து தரைமட்டமாகும் போது என்ன சொல்லப் போகிறது?

கேட்பதற்கே பகீர் என்றுள்ளது. இதைக் கட்டித் தந்த நிறுவனங்கள், அதை ஒப்பந்தம் செய்து கமிஷன் பெற்ற ஆட்சி அதிகாரத் தலைமைகள், துறை அதிகாரிகள், லோக்கல் கட்சிக்காரர்கள்.. எதிர்கட்சித் தலைவர்கள் பலப்பல வகையிலும் இந்த விவகாரங்களில் அன்றே பலன் அடைந்திருப்பார்கள். அதனால் தான் இவர்கள் அனைவரும் சந்தை மதிப்பீட்டை விட மிக அதிகத் தொகை தந்தும், மிக மட்டமாக கட்டுமானம் செய்த நிறுவனத்தை கண்காணிக்கவும், முறைப்படுத்தவும் தவறிவிட்டனர் என்பதோடு இன்று தட்டிக் கேட்கவும் தயங்குகின்றனர்.

## நேர்மையானவர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### அன்பைப் பார்க்க வேண்டும்

ஒரு நாள் சபர்மதி ஆசிரமத்தில் காந்திஜி எதையோ மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்தார். நீண்ட நேரம் தேடிய பின், அவர் தேடிய பொருள் கிடைத்தது. அது ஒரு சிறிய பென்சில்.

அதைக்கண்ட ஆசிரமவாசிகள் அனைவருக்குமே ஒரே ஆச்சரியம்.

அவர்களில் ஒருவர், ”பாபுஜி! தாங்கள் ஏதோ ஒரு முக்கியமான பொருளைத் தொலைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருப்பதாக எண்ணினோம். ஆனால் இந்த சிறிய பென்சிலுக்குத் தாங்கள் முக்கியத்துவம் கொடுத்துத் தேடியது எங்களுக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அதன் காரணத்தை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?” என்று கேட்டார்.

“நிச்சயமாக! நான் தமிழகத்தில் உள்ள சென்னைக்குச் செல்லும் போதெல்லாம் ஜி.ஏ நடேசன் வீட்டில் தங்குவேன். ஒரு சமயம் அநு தங்கியிருந்த போது அவரது பெண் குழந்தை இந்தப் பென்சிலைத் தனது அன்புப் பரிசாக எனக்குக் கொடுத்தாள். இந்தச் சிறிய பென்சில் உங்களுக்கு மிகச் சாரதாரணமாகத் தெரியலாம். ஆனால் எனக்கு அப்படியல்ல. அந்தக் குழந்தையின் அன்பில் இந்த சிறிய பென்சில் எனக்கு விலைமதிப்பற்றதாகத்தான் தெரிகிறது” என்றார் காந்திஜி.

சிறிய விஷயமாக இருந்தாலும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்க காந்திஜி ஒருவரால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்த ஆசிரமவாசிகள், அடுத்து அந்தப் பென்சிலுக்கும் மரியாதை கொடுக்கத் தொடங்கினார்கள்.

---

### நகரங்களை நீர் - நிலப்பரப்புகளாக அங்கீகரிப்பது அவசியம்

நகரங்களை நீர் நிலப்பரப்புகளாக அங்கீகரிக்க வேண்டும்; சென்னை மழை வெள்ளம் நிலத்தை மையமாக கொண்ட நகரமயமாக்கலில் இருந்து விலக வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

சென்னை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வடகிழக்கு பருவமழை கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பெய்துள்ளது. 2015 ஆம் ஆண்டு பேரழிவை ஏற்படுத்திய சென்னை வெள்ளத்தின் நினைவுகளை சென்னை மக்களுக்கு மீண்டும் கொண்டு வந்து, அதிர்ச்சி அளித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களில், தெற்காசியாவில் வெள்ளம் நகர்ப்புறங்களில் அதிகம் ஏற்படுகிறது. இது நீண்ட காலமாக நகரத்தையும் நாட்டையும் பிரித்து வைத்திருந்த கர்வத்தை அழித்துவிட்டது. மும்பை, சென்னை, டாக்கா, கராச்சி மற்றும் காத்மாண்டு போன்ற முக்கிய நகரங்களில் அதிக தீவிர மழை காரணமாக வெள்ளம் மீண்டும் மீண்டும் நிகழ்கிறது. இந்த ஆண்டு அக்டோபரில், ஹைதராபாத்தில் பேருந்துகள் வெள்ளம் சூழ்ந்த சாலைகளில் மிதந்தன, அதே நேரத்தில் பெங்களூரில், இந்தியாவின் முதல் “கிரீன்ஃபீல்ட்” சர்வதேச விமான நிலையம் வெள்ளத்தில் மூழ்கியது.

இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், இந்திய துணைக்கண்டம் முழுவதும் பருவமழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகையில், IPCC இன் 6வது மதிப்பீட்டு அறிக்கை (AR6) வெளியிடப்பட்டது. 1950 களில் இருந்து அதிக மழைப்பொழிவு நிகழ்வுகளின் அதிர்வெண் அதிகரித்து வருவதை அறிக்கை குறிப்பிட்டது மற்றும் அவை மனிதனால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தால் ஏற்படுகின்றன என்று ஊகித்தது.

காலநிலை நெருக்கடி பற்றிய சந்தேகங்களுக்கான விளக்கங்களை தேடுகையில், காலநிலையானது, முன்னெப்போதையும் விட தீவிர மழை நிகழ்வுகளை மிகவும் கடுமையானதாகவும் கணிக்க முடியாததாகவும் ஆக்கியுள்ளது. இருப்பினும், நகர்ப்புறங்களில் வெள்ளம் மீண்டும் மீண்டும் வருவதை ஓரளவு மட்டுமே விளக்குகிறது. இதற்கான விளக்கமும் நில அரசியலில் புதைந்து கிடக்கிறது.

இந்திய துணைக்கண்டத்தில் உள்ள அனைத்து நகரங்களும் நீர்நிலை நகரங்கள். அவை ஆறுகளால் இழைக்கப்பட்டவை, சதுப்புநிலங்கள் மற்றும் நீரூற்றுகள் கொண்டவை, மேலும் அவை கண்ணுக்கு தெரியாத நீர்நிலைகளின் மேல் உருவாக்கப்பட்டுள்ளன. ஆயினும்கூட, நிலத்தின் மீதான தாகத்தால் உந்தப்பட்டு, நமது நகரங்கள் தண்ணீருடன் வாழப் பழகாமல் அடிபணியச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளன. இந்த நில மையவாதம்தான் நகர்ப்புற வடிகால்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

வடிகால் என்ற சொல் பழைய ஆங்கிலத்தில் இருந்து பெறப்பட்டது, dreahnian, முதலில் திரவத்தை வெளியேற்றுவதைக் குறிக்கிறது. நகர்ப்புற வடிகால், அதன் சொற்பிறப்பிற்கு நியாயம் செய்ய வேண்டுமானால், நகரங்கள் நீர் ஊடுருவி செல்லும் பகுதிகளாகவும், கடந்து செல்ல அனுமதிக்கும் வகையிலும் சல்லடைகளாக மாற வேண்டும். இதற்கு, நகரத்தை ஒட்டிய ஏராளமான இயற்கை நீர்வழித் தடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், ஏனெனில் அவை தண்ணீரை வெளியேற்றி, அழியக்கூடிய நிலத்தடி நீர்நிலைகளை நிலைநிறுத்துகின்றன. இந்த நீர்வழித் தடங்கள் இயற்கையான புயல் வடிகால்கள் அல்லது நுல்லாக்கள் என புறக்கணிக்கப்பட்டவை. இவை நிலத்தை மையமாகக் கொண்ட நகர்ப்புற வளர்ச்சியின் பலிபீடத்தில் தியாகம் செய்யப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில், பெங்களூருவில் உள்ள குப்பி லேப்ஸ் என்ற ஆராய்ச்சிக் குழு, புவிசார் இமேஜிங் மூலம் 376 கிமீ இயற்கையான புயல் வடிகால்கள், ஆக்கிரமிப்பு மற்றும் நடைபாதைகளாக, இந்தியாவின் சிலிக்கான் பள்ளத்தாக்கின் (பெங்க்ளூருவின்) இதயத்திலிருந்து மறைந்துவிட்டதாக நிறுவியது.

2015 ஆம் ஆண்டில், இந்தியாவில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயம் டெல்லியில் உள்ள இயற்கை மழைநீர் வடிகால்களின் நிலையை அறிக்கையிட ஒரு குழுவை அமைத்தது. ஆய்வில், 1976 இல் பதிவு செய்யப்பட்ட 201 “வடிகால்களில்”, 44 “காணாமல்” போய் இருப்பது கண்டறியப்பட்டது.

இரண்டு சந்தர்ப்பங்களிலும், இந்த “காணாமல் போன” நீர்வழித் தடங்கள் ஒன்று ஆக்கிரமிக்கப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன அல்லது கழிவுநீர் வடிகால்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. மறைந்து வரும் நகர்ப்புற நீர்வழித் தடங்களை மீட்டெடுப்பதில் உள்ள அக்கறையின்மை, பண்டைய நதிகளை புத்துயிர் அளிப்பதில் இந்திய அரசாங்கத்தின் சமீபத்திய முயற்சிகளுக்கு முற்றிலும் மாறுபாடாக உள்ளது.

மோசமான வடிவமைப்பு மற்றும் ஊழல், தெற்காசிய நகர்ப்புற திட்டமிடலுடன் பிரிக்க முடியாதவை. இவை நகர்ப்புற வெள்ளத்திற்கு கணிசமாக காரணமாகின்றன. மழைநீர் வடிகால்களின் வடிவமைப்பை பொறுத்தவரையில், அவற்றின் வெளியேற்று அமைப்புகளின் அளவு மழையின் தீவிரம் (மிமீ/மணிக்கு) மற்றும் வடிகால்களுக்குள் இருக்கும் அதிகப்பட்ச நீர் ஓட்டத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். இருப்பினும், பெரும்பாலான தெற்காசிய நாடுகளில், வடிகால்களின் வடிவமைப்பு வழிகாட்டுதல்களின்படி இல்லை, அல்லது வெளியேற்று அமைப்புகள் அதிகபட்ச நீர் ஓட்டத்திற்கு இடமளிக்க முடியாத அளவுக்கு சிறியதாக உள்ளன. உதாரணமாக, கராச்சியின் குறிப்பிட்ட பகுதிகளில், ரியல் எஸ்டேட் சொத்துகளில் இருந்து மழைநீர் வடிகால் பிரதான சாலைகளை நோக்கி செலுத்தப்படுகிறது. இதனால், சராசரிக்கும் சற்று மேலான மழையே, வெள்ளம் நிறைந்த பகுதிகளை உருவாக்குகிறது என்பதில் ஆச்சரியமில்லை.

அதேபோல், சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் நகராட்சி விதிகளை மீறி, திறந்தவெளிகள், சதுப்பு நிலங்கள் மற்றும் வெள்ள வடிகால் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள

கட்டுமானங்கள், நகரங்களை மழைநீருக்கு எதிரியாகவும், ஊடுருவ முடியாததாகவும் மாற்றியுள்ளன. தெற்காசியாவில் உள்ள அனைத்து நகரங்களிலும், மழைநீர் வடிகால்களில் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. கராச்சியில் இதுபோன்ற ஆக்கிரமிப்புகளால் வடிகால்களின் அகலம் 200 அடியில் இருந்து 20 அடியாக குறைந்துள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, போதுமான சமூக வீடுகள் இல்லாததால் தாழ்வான வடிகால் பகுதிகளில் ஆபத்தான நிலையில் வாழும் நகர்ப்புற ஏழைகள் மீது ஆக்கிரமிப்பு குற்றச்சாட்டுகள் எப்போதும் சுமத்தப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டு பேரழிவை ஏற்படுத்திய சென்னை வெள்ளத்திற்குப் பிறகு, நகர்ப்புற நீர்வழித் தடங்கள் மற்றும் சதுப்பு நிலங்களின் மிகப்பெரிய ஆக்கிரமிப்பாளர் உண்மையில் தமிழக அரசு என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டினர், தமிழக நீர்நிலைகளில் நடைபாதைகள், பேருந்து முனையங்கள் மற்றும் ஐடி பூங்காக்களை அரசு உருவாக்கியுள்ளது.

நகரமயமாக்கல் என்பது கான்க்ரீட்டிசேசன் (concretesation) என்று மாறியதிலிருந்து, மாறிவரும் காலநிலையில் பெய்யும் மழை நீரானது நிலத்தடி நுண்குழாய்கள் அல்லது மேற்பரப்பு நீர்நிலைகளை நோக்கி செல்வதில்லை. அதிகப்படியான குறுகிய கால மழையின் போது வெளியேற்றப்படும் பெரிய அளவிலான நீர் வடிகால் வலையமைப்புகளை நோக்கி திருப்பி விடப்படும், ஆனால் தற்போது அவை “காணாமல்” போய் இருக்கும் அல்லது குப்பைகள், கழிவுநீர் மற்றும் திடக்கழிவுகளால் அடைக்கப்பட்டிருக்கும். இருப்பினும் மழைநீர் எப்படியாவது அருகிலுள்ள ஆற்றை சென்றடைந்தாலும், அந்த ஆற்றின் கரை ரியல் எஸ்டேட்டாக மாற்றப்பட்டிருப்பதையும், ஆற்றின் படுகையில் மணலுக்காக அதிக அளவில் வெட்டியெடுக்கப்பட்டதையும் காணலாம். இது வெள்ளத்திற்கு காரணமாகிறது.

வெள்ளத்திற்கான அரசியல் பிரதிபலிப்பு எப்போதுமே பழியை வானத்திற்கு மாற்றுவதாகும். “நிலையற்ற” பருவமழை மற்றும் நதிகளில் ”அதிகப்படியான நீரின்” காரணமாக வெள்ளங்கள் ஏற்படுவதாக கூறப்படுகிறது. ஆனால் பதிலுக்கு, அணைகள், நீர்தேக்கங்கள், மதகுகள் மற்றும் கடல் சுவர்களை கட்டுவதற்கு நீர்நிலைகளில் மில்லியன் கணக்கான டன் கான்கிரீட் தொடர்ந்து ஊற்றப்பட்டு வருகிறது. முரண்பாடாக, தெற்காசிய நகரங்கள் ஊடுருவ முடியாத கான்கிரீட் கட்டிகளாக உருமாறியதால், அவை வெள்ளத்தை வீடுகளுக்குள் அழைத்துச் சென்றன.

நமது நகர்ப்புற அனுபவத்தை வடிவமைத்துள்ள ஹைட்ரோ::போபியாவை குணப்படுத்த, நாம் நிலத்தை மையமாகக் கொண்ட நகரமயமாக்கலில் இருந்து விலகி நகரங்களை நீர்நிலைகளாக அங்கீகரிக்க வேண்டும். நகர்ப்புற நதிகளை அவற்றின் வெள்ள வடிகால் அமைப்புகளுக்குத் திருப்பி அனுப்புவதன் மூலம் அவற்றை சுவாசிக்க நாம் அனுமதிக்க வேண்டும். ஒரு புனரமைக்கப்பட்ட ஏரி அல்லது மீட்டெடுக்கப்பட்ட நீர்வழித் தடம், வரவேற்கத்தக்கது என்றாலும், அது போதுமானதாக இல்லை. முழு நகர்ப்புற நீர்நிலைகளும் மீட்டெடுக்கப்பட வேண்டும், அது நடக்க, நமக்கு குறைவான கான்க்ரீட் அமைப்பு மற்றும் அடித்தளம் வரையில் அதிக ஜனநாயகம் மற்றும் அறிவியல் தேவை.

**இந்த கட்டுரை முதன்முதலில் நவம்பர் 12, 2021 அன்று அச்சுப் பதிப்பில் ‘நீருடன் வாழக் கற்றுக்கொள்வது’ என்ற தலைப்பில் வெளிவந்தது. கட்டுரையாளர்களில் ஆச்சார்யா, இங்கிலாந்து எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் Leverhulme Trust PhD ஆராய்ச்சியாளர்; தீட்சித் நேபாளத்தின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான நிறுவனத்தின் (ISET) மூத்த ஆலோசகர் ஆவர்.**

---

# **<u>நீதிபதி</u>**

* உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த மெகர் சந்த் மகாஜன் டார்ஜிலிங் சுற்றுலா போனார். அங்கே அவர் கார் ஓட்டிச் சென்றபோது போக்குவரத்து விதியை மீறினார். தவறை ஏற்று அபராதம் கட்டுவதாகச் சொன்ன மகாஜன், மறுநாள் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் போய் நின்றார். ``உங்கள் பெயர் என்ன?" என்று மாஜிஸ்திரேட் கேட்க... ``மகாஜன்" என்றார்.

'``என்ன வேலை பார்க்கிறீர்கள்?" என்று கேட்டபோது, ``சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியாக இருக்கிறேன்" என்று தயங்காமல் சொன்னார். உடனே அந்த மாஜிஸ்திரேட் ``மை லார்டு" எனப் பதறி எழுந்து மகாஜனை வணங்கினார். ``உட்காருங்கள். உங்கள் டூட்டியைச் செய்யுங்கள்" என்றார் மகாஜன்.

``முதல்முறை தவறு செய்கிறவர்களை விடுதலை செய்யும் அதிகாரம் எனக்கு உண்டு. அதனால், உங்களை விடுவிக்கிறேன்" என்றார் அந்த மாஜிஸ்திரேட். மகாஜன் வெளியில் வந்தார்! மெகர் சந்த் மகாஜன்.

* சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த டி.சத்தியதேவ் ஒரு நாள்கூட விடுமுறை எடுத்ததே இல்லை. அவர் மகனுக்கு வீட்டில் வைத்துத்தான் பதிவுத் திருமணம் நடத்தப்பட்டது. அந்தத் திருமணத்துக்காக வந்த, சக நீதிபதிகள் எல்லாம் அரை நாள் விடுமுறை போட்டுவிட்டு வந்தார்கள். ஆனால், சத்தியதேவ் தன் மகனின் திருமணம் முடிந்த கையோடு கோர்ட்டுக்குக் கிளம்பிப் போனார். அவருக்குத் தலைமை நீதிபதியாகும் வாய்ப்பு வாய்க்கவில்லை.

*தலைமை நீதிபதி 6 வாரத்துக்கு மேல் விடுமுறை எடுத்தால் “பொறுப்பு தலைமை நீதிபதி” நியமிக்கப்படுவது வழக்கம். அப்போது தலைமை நீதிபதியாக இருந்த ஆனந்த், பொறுப்பு தலைமை நீதிபதியாக சத்தியதேவ் சில காலம் இருக்க வேண்டும் என்பதற்காகவே 6 வாரம் விடுமுறை எடுத்தார். அந்த அளவுக்கு மதிக்கப்பட்டவர் சத்தியதேவ்!

* குரு பிரசன்ன சிங். மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்தவர். ``பள்ளி ஆவணத்தில் சொல்லப்பட்ட வயதுக்கும் உண்மையான வயதுக்கும் வித்தியாசம் இருக்கிறது. உண்மையான வயது அடிப்படையில் எனக்கு ரிட்டையர்மென்ட் தேதி வந்துவிட்டது. அதனால், ஓய்வு பெறுகிறேன்" எனச் சொல்லிக் கிளம்பிவிட்டார். குரு பிரசன்ன சிங் உண்மையை மறைத்திருந்தால் கூடுதலாக ஒன்றரை ஆண்டு இருந்து, பிறகு உச்சநீதிமன்ற நீதிபதியாகி இருப்பார். மனசாட்சிக்குப் பயந்து நேர்மையோடு நடந்துகொண்ட புண்ணியவான்!

* நீதிபதி கே.பி.சுப்பிரமணியம் கவுண்டரின் தந்தை கே.எஸ்.பழனிசாமி கவுண்டர் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்தார். சென்னை சென்ட்ரல் அருகே அவர் ஓட்டி வந்த கார் சிக்னலைத் தாண்டி வந்துவிட்டது. அந்தக் காரை மடக்கி அருகில் இருந்த நடமாடும் நீதிமன்றத்தில் பழனிசாமியை நிறுத்தினார்கள். இவரைப் பார்த்ததும் மாஜிஸ்திரேட் அரண்டு போனார். ``அபராதம் கட்டத் தேவையில்லை" என மாஜிஸ்திரேட் சொல்லியும் பத்து ரூபாய் அபராதத்தைக் கட்டிவிட்டுத்தான் போனார் நீதிபதி பழனிசாமி.

* மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஒரு நீதிபதியின் தியாகம் இது! ஒரு வழக்குக்குத் தீர்ப்பு தேதி குறித்துவிட்டார் அந்த நீதிபதி. அன்றைய தினம் கோர்ட்டுக்கு வந்த நீதிபதியின் முன் இரு தரப்பு வழக்கறிஞர்களும் தயாராக நின்று கொண்டிருந்தார்கள். `என்ன விவரம்?" என்று அவர் கேட்க... ``இன்று எங்களது வழக்குக்குத் தீர்ப்புச் சொல்வதாகச் சொல்லி இருந்தீர்கள்" என்று வழக்கறிஞர்கள் சொன்னார்கள். உடனே கேஸ் கட்டை எடுத்துப் பார்த்தவர். ``இதோ வருகிறேன்" எனச் சொல்லி அறைக்குப் போனார். தன் மறதிக்கான தண்டனையாக, ராஜினாமா கடிதத்தை எழுதித் தந்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார்.

சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்தவர் சுப்பிரமணிய ஐயர். அவர் முன்பு வழக்கு ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்த வழக்கின் ஆவணங்களை அவரிடம் நீட்டியபோது அதைப் படிக்கச் சிரமப்பட்டார். சுப்பிரமணிய ஐயர். இன்னொரு கண்ணாடியை மாற்றிப் போட்டுப் படிக்க முயன்றும் முடியவில்லை. பெஞ்ச் கிளார்க்கிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். படித்துக் காட்டப்பட்டது. வழக்கறிஞரும் அதைப் படித்தார். என்ன நினைத்தாரோ உடனே சேம்பருக்குப் போன சுப்பிரமணிய ஐயர், ஆளுநருக்குத் தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பிவிட்டு வீட்டுக்குக் கிளம்பிவிட்டார். ஆம். `கண் பார்வை மங்கிய பிறகு பணியில் இருப்பதில் அர்த்தம் இல்லை’ எனப் பதவியை உதறியவர் சுப்பிரமணிய ஐயர்.

- **இப்படி தியாக வாழ்க்கை வாழ்ந்த நீதிமான்கள் நிறைய பேர் நீதித்துறையில் நிரம்பியிருக்கிறார்கள். அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள்.**

**ஜனாதிபதிக்கே பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டிய பதவி..**

| | |
|---|---|
| **இயக்கத்தில் இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்**<br>***<u>2021-22 இல் இணந்த ஆண்டு உறுப்பினர்</u>***<br>**திரு ந. சந்திரன்**<br>1/24, பாடசாலை தெரு, சின்ன தோப்பு<br>வட பெரும் பாக்கம்,<br>திருவள்ளூர்- 600060 போன் : 9345 6982 5631 | *<u>குறிப்பு:</u>*<br><br>**தவிர்க்க முடியாத காரணங்களால் தலைவர் மடல் பிரசுரிக்க முடியவில்லை.**<br>**அடுத்த இதழில் தொடரும்** |




# இளைஞர்களை தூண்டில் போட்டு அழிக்கும் கடன் திட்டங்கள்!

சம்பாதிக்க கற்றுக் கொள்வதற்குள் கடன் வாங்க கற்றுக் கொடுக்கும் வங்கிகள்! தனி நபர் கடன்கள்,கிரடிட் கார்டுகள், Lazypay.. இந்த வலைப் பின்னலுக்கு பின்னால் இருக்கும் சூழ்ச்சிகள் என்ன..? கண்ணை மூடிக் கொண்டு கடன் வாங்கியவர்களின் கதி என்னவாகிறது..? இந்தியாவில் பெரும்பாலான மக்கள், அடி நிலை, நடுத்தர நிலை மக்களாகும். இவர்களுக்கு வாழ்க்கை முழுவதும் பணத் தட்டுப்பாடு இருந்து கொண்டே இருக்கும். இவர்களிடம் வங்கிகளே நாங்கள் தனிநபர் கடன் கொடுக்கிறோம், அதற்கு எந்த வித அடமானமும் தேவை இல்லை. உங்கள் சம்பள விவரம், வங்கி ஸ்டேட்மென்ட் கொடுத்தால் போதும்! 5 நாட்களில் பணம் உங்கள் வங்கி கணக்கில் சேர்ந்துவிடும் என்று பேசும்பொழுது, எந்த நேரமும் பணம் தேவை இருக்கும் நபர்கள் சுலபமாக இதில் விழ்ந்து விடுகிறார்கள்.

வியாபாரக் கடன், வீட்டுக் கடன், வாகனக் கடன், நகைக் கடன் இப்படித்தான் வங்கிகள் தங்களிடம் வரும் பணத்தை கடனாக வெளியே கொடுத்து, வாங்கிக் கொண்டு இருந்தன. இதில் நடுத்தர மக்கள் பெரும்பாலும் வாகனக் கடன் அல்லது வீட்டுக் கடன் வாங்க வங்கிக்குச் செல்வார்கள். மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் அதிகம் நகை கடன் பெறுவார்கள். வியாபாரம் செய்பவர்கள் தொழில் கடன் பெறுவார்கள். படிப்பு முடித்து வேலைக்கு செல்லும் இளைஞர்கள் மனதில் வங்கி கடன் என்பது அவர்கள் நினைவில் இருப்பதில்லை. காரணம், அவர்கள் வீடு வாங்கும்பொழுதோ அல்லது வாகனம் வாங்கும் போதோ தான் வங்கி நோக்கி செல்கிறார்கள்.

இங்குதான் பெரும் மாற்றங்கள் தனியார் வங்கிகள் மூலம் வரத் தொடங்கின. பல லட்சம் இளைஞர்கள் கடன் சிக்கலில் மாட்டத் தொடங்கினார்கள். புதிதாக தனிநபர் கடன்(Personal Loan) என்று ஒன்றை தனியார் வங்கிகள் உருவாக்கினார்கள். சமீபமாக Lazypay என்ற கடன் முறை வந்து உள்ளது. அவற்றை கடைசியாக பார்ப்போம்.

தனியார் வங்கிகள் யோசித்தார்கள். வீட்டுக் கடன் அனைத்து வகை மக்களுக்கும் வழங்க முடியாது. சம்பளம் கொஞ்சம் உயர்வாக வாங்குபவர்கள் மட்டுமே திருப்பிக் கட்ட முடியும். நடுத்தர, தொடக்க நிலை மக்களை நோக்கி தனிநபர் கடன் முறையை கொண்டு வந்தார்கள்! சந்தையில் இருக்கும் மொத்த கடன் முறையையும் இதன் மூலம் மாற்றிவிட்டார்கள். இதனால் பெரும் கடன் சிக்கலில் லட்சக்கணக்கான இளைஞர்கள் மாட்டிக் கொண்டார்கள். 10,000 ரூபாய் வருமானம் இருந்தாலும் 1 லட்சம் ரூபாய் தனிநபர் கடன் கொடுக்கத் தொடங்கினார்கள். நாம் வங்கிக்கு சென்று கடன் கேட்கும் முறை இல்லாமல் வங்கி பணியாளர்கள் தனியார் நிறுவனங்கள் முன்பு நின்று அழைக்கத் தொடங்கினார்கள்.

ஒரு தனிநபர் கடன் வாங்க தொடங்கிவிட்டால் மீண்டும், மீண்டும் அதை நோக்கி நம் கவனம் செல்ல தொடங்கிவிடும். ஏற்கனவே வாங்கிய கடனை 95 சதவிகிதம் நபர்கள் வீண் செலவுகள் செய்து விடுகிறார்கள் என்பதுதான் உண்மை. மற்ற கடனுக்கு எல்லாம் ஒரு குறிக்கோள் உண்டு. வீட்டு கடன், வாகனம் வாங்க வாகன கடன் இவற்றில் நோக்கம் உள்ளது! ஆனால் தனிநபர் கடனுக்கு எந்த குறிகோளும் இல்லை. இந்த கடன் வாங்குபவர்கள் அந்த பணத்தை என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்ளும் வாய்ப்பே அதிகம் உள்ளது. கட்டவில்லையென்றால், இவர்களை மிரட்டுவது, அடியாட்களை அனுப்பி அச்சுறுத்துவது என்று பல நெருக்கடிகள் தருவது அனைவருக்கும் தெரியும்.

இளம் வயதில் சுலபமாக கடன் கிடைக்கும்பொழுது அவர்களுக்கும் பணம் தொடர்பான எந்த குறிக்கோள்கள் இருப்பதில்லை. வாங்கிய கடனை கட்ட இன்னொரு வங்கியில் தனிநபர் கடன் வாங்க செல்வார்கள்! இப்படி வேலைக்கு சேர்ந்த சில வருடங்களில் மூன்று, நான்கு கடன் அவர்கள் பெயரில் இருக்கும். முடிவில் இந்த கடன்களை கட்டவே வாங்கும் சம்பளம் முழுவதும் போய்விடும்! இன்னும் சிலருக்கு மேலும், மேலும் கடன் வாங்கி கட்டிக் கொண்டு இருப்பார்கள். அப்பொழுது எப்படி வாடகை, சாப்பாடு ? சேமிப்பு? எதிர்க்கலாம்?






இதற்கு அடுத்து வங்கிகள் யோசித்தது. தனிநபர் கடன் ஒருவருக்கு கொடுத்துவிட்டோம். அதை கட்டிய பிறகுதான் மீண்டும் கடன் கொடுக்க முடியும். அதுவரை அந்த நபருக்கு வேறு எப்படி கடன் கொடுக்கலாம் என்று சிந்தித்து கிரெடிட் கார்டு என்ற முறையை கொண்டு வந்தார்கள். நீங்கள் வாங்கும் பொருட்களுக்கு நாங்கள் பணம் செலுத்தி விடுகிறோம் 30 அல்லது 40 நாட்களுக்கு பிறகு நீங்கள் திருப்பி கொடுத்தால் போதும்! அதற்கு எந்தவித வட்டியும் நீங்கள் செலுத்த வேண்டாம் என்று சொல்லி மீண்டும் அனைத்து நிறுவனங்கள் முன்பு வங்கி பணியாளர்கள் நின்று அழைத்தார்கள்.

ஒரு வங்கியில் தனிநபர் கடன் வாங்கிய நபருக்கு அதே வங்கி பணியாளர்கள் போன் செய்து நீங்கள் கிரெடிட் கார்டு வாங்க தகுதி உள்ளதால் ஒரு கையெழுத்து போட்டால் போதும் 10 நாட்களில் உங்கள் முகவரிக்கு கடன் அட்டை வந்துவிடும் என்று சொல்லும்பொழுது, இந்த நபர் வேண்டாம் என்று சொன்னாலும் மீண்டும் மீண்டும் போன் செய்து கொண்டே இருப்பார்கள். பெரிய தொல்லையாக மாறிவிடும். ஒரு கட்டத்தில் சரி என்று கடன் அட்டை வாங்கிவிடுவார். இப்பொழுது ஒரு வங்கியில் அவருக்கு தனிநபர் கடன், கிரெடிட் கார்டு கடன் என்று இரண்டு கடன்கள் இணைந்துவிடும்.

நாம் யோசிக்கலாம்: வாங்கும் பொருட்களுக்கு எந்தவித வட்டியும் இல்லாமல் அந்த பணத்தை திருப்பி கொடுத்தால் போதும் என்று வங்கிகள் சொல்லும்பொழுது அவை எப்படி கடன் ஆகும் ? நமக்கு எதற்கு வட்டி இல்லாமல் வங்கிகள் பணம் கொடுக்கிறது? என்று எப்போதாவது நாம் யோசித்து பார்த்து இருக்கிறோமா?

வீட்டின் மின்சார கட்டணம், வருடம் ஒரு முறை செலுத்தவேண்டிய வாகன காப்பீடு கட்டணம் போன்ற அத்தியாவசிய கட்டணத்தையே பெருபாலானவர்கள் அந்த நாட்களை கடந்து தான் கட்டுவார்கள். ஒன்று மறதியாக இருக்கலாம். அல்லது அதற்கான பணம் அந்த நேரம் இல்லாமல் இருக்கலாம். இது தான் வங்கிகளுக்கு லாபம். சரியான நேரத்தில் கட்ட மாட்டார்கள் என்று திடமாக நம்பினார்கள். அப்படியே நடந்தது.

இன்றும் குறிப்பிட்ட நாட்களுக்குள் வட்டியில்லாமல் செலுத்தும் மக்கள் மிக மிக குறைவானவர்களே. குறிப்பிட்ட நாட்கள் கடந்துவிட்டால் வங்கிகள் நாம் கட்டவேண்டிய தொகைக்கு வட்டி போடத் தொடங்கி விடுவார்கள். தனிநபர் கடன் வட்டியை விட கிரெடிட் கார்டு வட்டி மிக மிக அதிகம். செலுத்தவே முடியாத நிலையே வரும். இன்று ஐ.டி.யில் பணிபுரியும் பெரும்பாலானோர் இப்படி பெரும் கடன் சிக்கலில் மாட்டிக் கொண்டு தவிப்பதை நேரடியாக அறிவேன். இப்படி வங்கிகள் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனை பிடிக்கும் கலைதான் இவையாவும்!

ஒரு கிரெடிட் கார்டு வாங்கிவிட்டால் போதும், அதைக் கொண்டே அடுத்த வங்கி கிரெடிட் கார்டு கொடுத்துவிடும். இப்படி என் நண்பர் 20 கிரெடிட் கார்டு வைத்து இருந்தார். நீங்கள் தனிநபர் கடன், கிரெடிட் கார்டு வாங்குவது குறித்து உங்கள் எண்ணத்தில் இருக்காது. ஆனால் உங்கள் சம்பளத்தை தனியார் வங்கியில் உங்கள் நிறுவனம் செலுத்துவார்கள். இது போதும் வங்கிகளுக்கு. அவர்களும் அதைப் பார்ப்பார்களே. உங்கள் சம்பளத்திற்கு இவ்வளவு தனிநபர் கடன், கிரடிட் கார்டு போன்றவை வழங்கப்படும் என்று ஓயாமல் போன் செய்து சொல்லிக் கொண்டு இருப்பார்கள். ஒரு கட்டத்தில் வாங்கிவிடுவீர்கள். கட்டாயப்படுத்தி ஓயாமல் நம்மை தொந்தரவு செய்து கடன்வாங்கச் செய்வதும் ஒரு வகையில் சூழ்ச்சியே!

இதைத்தான் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்தில் பேசிக் கொண்டு இருக்கும் பொழுது ஒரு வங்கியில் இருந்து இவருக்கு போன் செய்து கிரெடிட் கார்டு பற்றி பேசி இருந்ததை வெளிப்படையாகவே சொன்னார். புதிதாக தற்போது Lazypay என்ற முறை வந்துள்ளது. நீங்கள் வாங்கும் பொருட்களுக்கு பணம் செலுத்த வேண்டாம். பிறகு EMI வழியில் பணம் செலுத்தினால் போதும் என்ற முறையை இன்று நிறைய ஆன்லைன் வலைத்தளங்கள் கொண்டு வந்துள்ளன. பெரும் பொருட்களை விற்கும் நிறுவனங்களும் இதை தொடங்கியுள்ளது.

ஏற்கனவே கடனாளியாக இருக்கும் நம் மக்களை மேலும் கடன் வாங்க வைக்கும் முறை தான் lazy pay ஆகும். பணம் இருந்தால் அவர்களுக்கு தேவையான பொருட்கள் வாங்குவார்கள். பிறகு கட்டலாம் என்றால் தேவையில்லாமல் வாங்கி கொண்டு இருப்பார்கள். வீட்டிலும் தேவையில்லாத பொருட்கள் சேரும். கடனும் சேர்ந்து கொண்டு இருக்கும். Lazypay முறையும் கிரெடிட் கார்டு போன்றே செய்லபடும். குறிப்பிட்ட காலத்தில் திருப்பி செலுத்தினால் வட்டி கிடையாது. இல்லையென்றால் அதன் பிறகு வட்டி வசூலிப்பார்கள். எப்படியும் வாங்கும் நபர்கள் குறிப்பிட்ட நாட்களுக்குள் கட்ட மாட்டார்கள் என்ற எண்ணம் காரணம் தான்.

தவறு செய்யாத மனிதர்கள் இந்த உலகில் இருப்பதில்லை. இவைதான் இந்த கடன்களுக்கு அஸ்திவாரமே. மனிதர்கள் தனக்கு இந்த கடன் முறைகள் வேண்டாம் என்று உறுதியாக இருந்தால் இத்தகைய கடன் திட்டங்கள் காணாமல் போய்விடும். ஆனால் அப்படி எந்த காலத்திலும் முடியாது என்பதே உண்மை.

**இன்றும் ஏதாவது ஒரு வங்கியில் இருந்து கடன் வாங்கிக்குங்க என்று வாடிக்கையாளர்களுக்கு போன் செய்து பேசிக் கொண்டுதான் இருப்பார்கள். நமக்கு விழிப்புணர்வு இல்லையென்றால் கடன் சிக்கலில் மாட்டும் சூழல் வந்தே தீரும்.**

**-ஜெ. இளஞ்செழியன்**

## <u>செயற்குழு கூட்டம்</u> (25-12.2021)

**இன்று** (25-12.2021) **நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அனத்து செயலாளர்களும் (திரு சாந்தகுமார் தவிர),** 4 **பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன**..

1) ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் ஏப்ரல் 2021 முதல் நவம்பர் 2021 வரையிலான வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேறியது.

2) வி.சந்திரன் அவர்கள் ஆண்டு உறுப்பினராவதற்கு விண்ணபத்திருந்தார். நிர்வாகக் குழு விவாதித்து, ஆண்டு உறுப்பினராவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) ஊ.எ.இயக்கத்தின் வெப்சைட் (WEBSITE) ஜனவரி/பிப்ரவரியில் புதிப்பிக்கப்பட வேண்டும். அடுத்த ஆண்டு முதல் எல்லா செயல்களையும் நமது வெப்சைட்டில் பதிவிடவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

4) நமது இயக்கம் தொடுத்த பொதுநல வழக்கு (செந்தில் பாலாஜி) யின் தற்போதைய நிலவரம் கேட்கப்பட்டது. விசாரணை ஏதும் நடைபெறவில்லை என்றும், ஜனவரி 7ம் தேதிக்கு ஒத்தி வைத்திருப்பதாகவும் எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து விரைவாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

5) அனைத்து இயக்க உறுப்பினர்களின் விலாசம் இ-மெயில் E-Mail), வாட்சப் (Whatsapp) ஆகியவை கேட்கப்பட்டு அனைத்தையும் பதிப்பித்து (Update) மேம்படுத்த வேண்டுமென தீர்மானிக்கிறது.

6) நேர்மைநெறியில் கட்டுரைகள் வரவேற்க்கப்படுகின்றன. நடந்த ஊழல்கள், ஊழல் எதிர்ப்பு கட்டுரைகள் வரவேற்கபடுகின்றன.

7) சமீபத்தில் ஊழல் தடுப்பு சட்டம் 1988 சீர்திருத்தம் செய்யப்பட்டது. அரசு ஊழியர் மீது எஃப்.ஐ.ஆர் (FIR) பதிவு செய்ய முடியாதது, 13(டி)ஐ.நீக்கியது என்பதான சட்டத்தை எதிர்த்து பொது நலவழக்கு பதிவு செய்ய நமது இயக்கம் தீர்மானிக்கின்றது. நமது பொது செயலாளருக்கு வழக்கு தொடுக்க முழு அதிகாரத்தையும் செயற்குழு வழங்குகிறது.

இறுதியில் பொது செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

| | |
|---|---|
| ந.சுப்ரமனியன் | வி.கார்த்திகைராஜன் |
| தலைவர் | பொதுசெயலர் |

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன</u>**.**

நன்கொடைகள்**.** வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது**.** பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் **.**

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**






பெரியகுளத்தில் 182 ஏக்கர் அரசு நிலம் அபகரிப்பு விவகாரம்:

# துணை கலெக்டர், ஆர்.டி.ஓ. உள்பட 14 பேர் மீது வழக்கு

தேனி, டிச.25– பெரியகுளத்தில் 182 ஏக்கர் அரசு நிலம் அபகரிக்கப்பட்ட விவகாரத்தில் துணை கலெக்டர், ஆர்.டி.ஓ. உள்பட 14 பேர் மீது தேனி மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

**அரசு நிலம் அபகரிப்பு**

தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில் அரசு நிலங்களை சிலர் அதிகாரிகள் துணையுடன் அபகரித்ததாக புகார்கள் எழுந்தன. இந்த புகார்கள் குறித்து பெரியகுளம் சப்-கலெக்டர் ரிஷப் விசாரணை நடத்தினார். அதில், பெரியகுளம் தாலுகாவுக்கு உட்பட்ட வடவீரநாயக்கன்பட்டியில் 109 ஏக்கர் நிலத்தை அ.தி.மு.க. ஒன்றிய செயலாளராக இருந்த அன்னபிரகாஷ் மற்றும் சிலர் அபகரித்ததாக தெரியவந்தது. இந்த நிலத்தின் அரசு மதிப்பு ரூ.1 கோடியே 44 லட்சத்து 13 ஆயிரம் என கணக்கிடப்பட்டது. அதுபோல், தாமரைக்குளத்தில் ரூ.60 லட்சத்து 55 ஆயிரம் மதிப்பில் 60 ஏக்கர் அரசு நிலம், கெங்குவார்பட்டியில் ரூ.8 கோடியே 62 லட்சம் மதிப்பில் 13 ஏக்கர் அரசு நிலத்தையும் அதிகாரிகள் துணையுடன் சிலர் அபகரித்ததும் தெரியவந்தது. இந்த 3 இடங்களிலும் சுமார் 182 ஏக்கர் அரசு நிலங்கள் அபகரிக்கப்பட்டது.

**சப்-கலெக்டர் புகார்**

இதையடுத்து இந்த நிலங்களுக்கு வழங்கப்பட்ட பட்டாக்கள் ரத்து செய்யப்பட்டன. அந்த நிலங்கள் மீட்கப்பட்டு அரசு நிலங்களாக மாற்றப்பட்டன. இந்த அரசு நிலங்களை 'அ' பதிவேட்டில் கணினி மூலம் திருத்தம் செய்து, கணினி பட்டா வழங்கப்பட்டதும், அதன் மூலம் அரசு நிலங்களை அபகரிக்க அதிகாரிகள் உடந்தையாக இருந்ததும் தெரியவந்தது. இந்த மோசடி குறித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பிரவீன் உமேஷ் டோங்கரேவிடம், தனித்தனியாக 3 புகார்களை பெரியகுளம் சப்-கலெக்டர் ரிஷப் கொடுத்தார். அந்த புகார்கள் மீது மாவட்ட குற்றப்பிரிவு போலீஸ் துணை சூப்பிரண்டு சுந்தர்ராஜ் விசாரணை நடத்தினார்.

**அதிகாரிகள் மீது வழக்கு**

விசாரணையை தொடர்ந்து இந்த மோசடி நடந்த கால கட்டத்தில் பெரியகுளத்தில் ஆர்.டி.ஓ.க்களாக பணியாற்றிய ஜெயப்பிரிதா, ஆனந்தி, தாசில்தார்கள் ரத்தினமாலா, கிருஷ்ணகுமார், மண்டல துணை தாசில்தார்கள் மோகன்ராம், சஞ்சீவ் காந்தி, நில அளவையர்கள் பிச்சைமணி, சக்திவேல், வடவீரநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ், நில அளவையரின் உதவியாளர் அழகர், மண்டல துணை தாசில்தாரின் உதவியாளர் ராஜேஷ்கண்ணன், நிலத்தை அபகரித்த அன்னப்பிரகாஷ், முத்துவேல் பாண்டியன், போஸ் ஆகிய 14 பேர் உள்பட பலர் மீது மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் நேற்று வழக்குப்பதிவு செய்தனர். இதில், ஆனந்தி தற்போது பழனி ஆர்.டி.ஓ.வாக பணியாற்றி வருகிறார். ஜெயப்பிரிதா திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் துணை கலெக்டராக பணியாற்றி வருகிறார். தாசில்தார்கள் ரத்தினமாலா, கிருஷ்ணகுமார், துணை தாசில்தார்கள் மோகன்ராம், சஞ்சீவ் காந்தி, நில அளவையர்கள் பிச்சைமணி, சக்திவேல் ஆகியோர் ஏற்கனவே பணி இடைநீக்கம் செய்யப்பட்டு விசாரணை வளையத்தில் உள்ளனர்.

அரசு நிலம் அபகரிக்கப்பட்ட விவகாரத்தில் அதிகாரிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Tasmac கடைகளில் விற்பனை எந்த அளவு ஏறுகிறதோ அந்த அளவு நாட்டின் வளர்ச்சி சீர்கேடு அடையும் எத்தனை திட்டங்கள் போட்டாலும்!! இதுதான் நிதர்சனமான உண்மை!!



லஞ்சம் வாங்கிய பெண் கிராம நிர்வாக அலுவலர் பணியிடை நீக்கம்

₹5,000 லஞ்சம் வாங்கிய மின்வாரிய அதிகாரி கைது

நில அளவிடு செய்ய ₹10 ஆயிரம் லஞ்சம்

சர்வேயர் உள்பட 2 பேர் சிக்கினர்

₹10 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தாசில்தார், டிரைவர் கைது

லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி

பஞ். தலைவரிடமே லஞ்சம் வாங்கிய யூனியன் மேலாளர்

அதிரடி சஸ்பெண்ட்

திருப்பத்தூர் பிடிஓ அலுவலகத்தில்

பசுமை வீடு திட்டத்தில் காசோலை வழங்க மலை கிராம மக்களிடம் ₹2 ஆயிரம் லஞ்சம்

நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

திருச்செங்கோட்டில் நில அளவிடு செய்ய

ரூ.5 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வருவாய் ஆய்வாளர் கைது

ரூ.20 ஆயிரம் லஞ்சம் வாங்கிய விஏஓ உள்பட 3 பேர் சிக்கினர்

நம்பியூர் தாலுகா அலுவலகத்தில் பரபரப்பு

This is neither surprising nor shocking in a nation where we tolerate people with fake degrees ruling us!

THE TIMES OF INDIA

# Fake lawyer serves as 'magistrate' for 21 yrs

## Even Draws Pension After Retirement

A.Subramani@timesgroup.com

**Chennai:** It is perhaps time to look for fake judicial officers too, not just fake lawyers. The authorities at the Bar Council of Tamil Nadu and Puducherry are yet to get over the shock of finding that a man managed to served the Tamil Nadu judicial service as a magistrate for more than 21 years without any recognised law degree.

Responding to a show-cause notice from the Bar Council, the 'magistrate', P Natarajan of Ulaganeri in Madurai, said, "It is not fair and justified to cancel enrollment as advocate of a person who was in judicial service for more than 25 years, including 21 years as judicial magistrate."

Natarajan said he did his BGL 'course' at Sarada Law College affiliated to Mysore University in Karnataka for two years through correspondence/distance education mode and was awarded a 'degree'. Apparently, he attended classes only for the third year during 1975-78.

At the time of the convocation, he told the Bar Council, he was not informed that his degree was valid only for 'academic' purposes and not for employment.

He was then selected as judicial magistrate on February 15, 1982, and after a 'peaceful' tenure of nearly 22 years, he retired on June 30, 2003.


As if this was not enough, within a month of his retirement, he enrolled himself as lawyer with the Bar Council of Tamil Nadu and Puducherry and was assigned enrolment number MS1739/2003.

After the Supreme Court ordered verification of certificates, the Bar council authorities stumbled upon his case and slapped a showcause notice on Natarajan on January 4, 2016.

The notice traced the academic as well as service history of Natarajan and called upon him to explain why he should not be removed from the rolls.

▶ Removed lawyers, P 6

**LAW OFFICERS UNDER SCANNER**





90,000 lawyers are registered with the Bar Council Of Tamil Nadu And Puducherry

> 56,000 submitted documents for verification


> More than 4,000 have not cleared necessary examination

2,000 identified as fake lawyers




லஞ்சம் பெற்ற வழக்கில்

# சர்வேயருக்கு 4 ஆண்டு சிறை




திருவள்ளூர், டிச.30: நிலத்தை அளவீடு செய்து தருவதற்காக ₹2 ஆயிரம் லஞ்சம் பெற்ற வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் சர்வேயருக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், ₹20 ஆயிரம் அபராதம் விதித்து திருவள்ளூர் நடுவர் நீதிமன்ற நீதிபதி வேலரஸ் தீர்ப்பு வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரைச் சேர்ந்தவர் கணேசன் (57). இவர் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அடுத்த திருப்பாலைவனம் பிர்க்காவின் சர்வேயராக பணிபுரிந்து வந்துள்ளார். அப்போது, பொன்னேரி அடுத்த ஆலாடு கிராமத்தைச் சேர்ந்தவர் ரவி (49). இவர் பட்டா உட்பிரிவு பெயர் மாற்றத்திற்காக நிலத்தை சர்வே செய்வதற்காக சர்வேயர் கணேசனை அணுகியுள்ளார். இதற்காக சர்வேயர் ₹2 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். இதுதொடர்பாக ரவி சென்னை லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் செய்தார்.

அவர்களது ஆலோசனையின் பேரில் ரவி கடந்த 2.3.2009 அன்று ரசாயனம்தடவிய ரூபாய் நோட்டை கணேசனிடம் அளித்த போது மறைந்திருந்த போலீசார் கையும், களவுமாக கைது செய்து அவர் மீது வழக்குப்பதிவு செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு திருவள்ளூர் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் லஞ்ச ஒழிப்பு துறை சிறப்பு வழக்குரைஞர் அமுதா ஆஜராகி வாதாடினர். இந்த நிலையில் இறுதிக்கட்டமாக தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி வேலரஸ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, குற்றம் நிரூபிக்கப்பட்டதால் சர்வேயர் கணேசனுக்கு 4 ஆண்டுகள் சிறைதண்டனையும், ₹20 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

தினகரன் Thu, 30 December 2021
https://epaper.dinakaran.com/c/65273078

# பட்டா மாறுதலுக்கு ரூ.4,000 லஞ்சம் சகோதரருடன் பெண் ஊழியர் கைது

உசிலம்பட்டி, ஜன. 1 –



காஞ்சனா

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பட்டா மாறுதலுக்கு, தாசில்தாருக்கு பரிந்துரைக்க 4,000 ரூபாய் லஞ்சம் வாங்கிய குறுவட்ட அளவர் மற்றும் உடந்தையாக இருந்த அவரது சகோதரரை லஞ்சஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.

உசிலம்பட்டி அருகே பூச்சிபட்டி ஆட்டோ டிரைவர் ரஞ்சித்குமார், 24. இவரது தந்தை இறந்த பின் அவர் பெயரில் இருந்த 5 சென்ட் இடத்தை தாயார், பாட்டி ஆகியோர் தான செட்டில்மென்ட் கொடுத்தனர்.

இடத்திற்கான பட்டாவை தன் பெயரில் மாற்றி கொடுக்க உசிலம்பட்டி நில அளவை அலுவலகத்தில் குறுவட்ட அளவர் காஞ்சனாவிடம், 40, ரஞ்சித்குமார் விண்ணப்பித்தார். 4,000 ரூபாய் லஞ்சம் கொடுத்தால் தாசில்தாருக்கு பரிந்துரைப்பதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று மதியம் அலுவலகத்தில் லஞ்சம் வாங்கிய காஞ்சனாவையும், உடந்தையாக இருந்த சகோதரர் செந்தில்குமார் 42, என்பவரையும் மதுரை லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி., சத்தியசீலன், இன்ஸ்பெக்டர்கள் ரமேஷ்பிரபு, குமரகுரு கைது செய்தனர்.

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- ஜனவரி 2022

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

**Political thinking** 😂😂

*Once a CM and his Deputy went to inspect a school and a prison. School was in very poor state with no furniture, dilapidated building etc. The Principal requested for Rs 5 lakhs to help to improve conditions. Next they visited a prison. There too the condition was pathetic but the jailer demanded Rs 50 lakhs to improve the condition of the cells. They came back and the CM wrote a cheque for Rs 50 lakhs for the Jail. Puzzled by the CM's decision, his deputy asked for an explanation as to why prison and not the school.*

*The CM explained "You and me are definitely not going to go to school anymore in future but we both may go to Jail. Therefore the facilities in prison must be improved so that our stay will be comfortable."*

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Nov 2021
Due to corona published online)

**ஊற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!**

***பெறுநர்***

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!